வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 11.12.2025 வியாழக்கிழமை | இதழ் : 345 | பக்கங்கள் : 08

# கோட்டாபய யாழ். வர அச்சுறுத்தல்; சத்திய கடதாசி வழங்க காலக்கெடு

## யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று உத்தரவு

த. பிரதீபன்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 11

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வருவதில் என்ன அச்சுறுத்தல் உள்ளது என்பதனை நியாயமான காரணங்களுடன் சத்திய கடதாசியாக சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

லலித், குகன் ஆகியோர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்கிலேயே நேற்றைய தினம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு மனித உரிமைகள் தினமான டிசெம்பர் 10 ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் நகரில் நடத்த திட்டமிடப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த லலித்குமார் வீரராஜ், குகன் முருகானந்தன் ஆகியோர் ஆவரங்கால் பகுதியில் வைத்து முதல் நாளன்று காணாமல் ஆக்கப்பட்டனர்.

இது தொடர்பில், ஆள்கொணர்வு மனுவை இருவரின் உறவினர்களும் கடந்த 2012ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்தனர். இந்த மனுமீதான விசாரணையில், இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதையடுத்து, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் 2012 செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பமாகின. இந்த நிலையில் குறித்த வழக்கு விசாரணைகளின் போது கடந்த 2017ஆம் ஆண்டு மனுவின் சாட்சியாளர்களின் பட்டியலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் பெயர் இணைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளில் கோட்டாபய ராஜபக்ஷவை மன்றில் முற்பட்டு சாட்சியமளிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால், "பாதுகாப்பு காரணங்களால் தன்னால் யாழ்ப்பாணம் வர முடியாது", என்று கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்து வந்திருந்தார்.

இந்த நிலையில்,

07

# பேரிடர் நிதி கொடுப்பனவில் யாழ்ப்பாணத்தில் முறைகேடு

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 11

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகளை சுத்தம் செய்ய ஒதுக்கப்பட்ட நிதியை வழங்குவதில் முறைகேடுகள் நடந்துள்ளன என்று பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில குற்றஞ்சாட்டியுள்ளார்.

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில்

07

# 1,216 குடும்பங்களே பாதிப்பு; வீடுகளல்ல

## நெடுந்தீவு பிரதேச செயலர்

யாழ்ப்பாணம், டிசெ. 11

நெடுந்தீவில் 901 வீடுகள் சேதமடைந்தன. ஆயிரத்து 216 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. முதலாவது சுற்றறிக்கையில் ஏற்பட்ட குழப்பமே சிக்கலுக்குக் காரணம் என்று நெடுந்தீவு பிரதேச செயலர் ந.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

பேரிடர் ஏற்பட்ட பின்னர் முதலாவதாக

07

# நீதி, பதில்களின்றி எமது போராட்டம் தொடர்கிறது

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் ஐ. நாவுக்கு கடிதம்!

எங்கள் குடும்ப உறுப்பினர்களைத் தேடி 16 ஆண்டுகளுக்கும் மேலாகப் போராடி வருகிறோம். இந்தப் போராட்டம் நீதியோ அல்லது உரிய பதில்களோ இல்லாமல் தொடர்கிறது - இவ்வாறு சுட்டிக்காட்டி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு வடக்கு, கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

07

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் வடக்கு - கிழக்கில் நேற்று போராட்டம்

குமார.கோகுலன், வி.ரி.சகாதேவராஜா

வவுனியா, டிசெ. 11

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்றைய தினம் வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கவனவீர்ப்பு

07



# பதுளையில் நிலச்சரிவு!

கொழும்பு, டிசெ. 11

பதுளை மாவட்டத்தில் நேற்று புதன்கிழமை அதிகாலை மீண்டும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

மீகஹகிவுல பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மொரஹெல - மீகொல்லை பகுதியிலேயே இந்த நிலச்சரிவு

07

# வடக்கின் 4 மாவட்டங்களில் வெள்ளம் ஏற்படும் அபாயம்

## பேராசிரியர் பிரதீபராஜா எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 11

மன்னார், யாழ்ப்பாணம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் தாழ்நில பகுதியில் உள்ள மக்கள் வெள்ள அபாயம் தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியம். குறிப்பாக, குளங்களின் கீழ்ப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிக அவதானமாக இருப்பது அவசியம் - என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறை தலைவரும் காலநிலை ஆய்வாள ருமான பேராசிரியர் நா. பிரதீபராஜா

07

# இரணைமடு குளத்தின் 8 வான் கதவுகள் திறப்பு

கிளிநொச்சி, டிசெ. 11

வன்னி மாவட்டங்களில் தொடர்ந்து பெய்யும் மழையால் கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் 8 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. தாழ் நில மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று மாவட்ட அரச அதிபர் எஸ். முரளிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 3 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும்

07

# வடக்கு, கிழக்கு ரயில் சேவை இப்போதைக்கு ஆரம்பமாகாது

## புகையிரத திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 11

வடக்கு, கிழக்கு, மலையகத்துக்கான ரயில் சேவையை எப்போது மீள ஆரம்பிப்பது என்று குறிப்பிட முடியாது. அந்தளவுக்கு புகையிரத பாதைகள் சேதமடைந்துள்ளன என்று புகையிரத திணைக்கள பொது முகாமையாளர் ரவீந்திர பத்மபிரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டில் ஏற்பட்ட பேரிடரால் சுமார் 30 கோடி டொலர் வரையில் புகையிரதத் திணைக்கள சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது

07

# மணல் டிப்பர் மோதியதில் இளம் குடும்பஸ்தர் மரணம்

கிளிநொச்சி, டிசெ. 11

மோட்டார் சைக்கிளில் வீதியோராமாக நின்ற இளம் குடும்பஸ்தரை பின்புறமாக மணலுடன் வந்த டிப்பர் மோதியதில் உயிரிழந்தார். உயிரிழந்தவர் மணல் அகழ்வுக்கு எதிராக செயல்பட்டவர் என்றும் இது திட்டமிடப்பட்ட விபத்தாக இருக்கலாம் எனவும் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கிளிநொச்சி - திருவையாறு - மொட்டை பாலம் அருகே இடம்பெற்ற இந்த விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த செல்வரத்னம் சோபநாத் (வயது - 35) என்பவரே உயிரிழந்தார்.

07

# படகில் ஏற முயன்றவர் கடலில் விழுந்து மரணம்

## நெடுந்தீவில் நேற்று துயரம்

த. பிரதீபன்

யாழ்ப்பாணம், டிசெ. 11

படகில் மூடையுடன் ஏற முயன்றவர் படகு கட்டியிருந்த கயிறு தடக்கி கடலில் விழுந்து மூழ்கி உயிரிழந்தார்.

நெடுந்தீவு மாவலி இறங்குதுறையில் நேற்று புதன்கிழமை காலை 6 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், நெடுந்தீவு கிழக்கு 15ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பரராசசிங்கம் பிறேமகுமார் என்பவரே உயிரிழந்தார்.

07

# தீபாவளியை அருவ கலாசார பட்டியலில் சேர்த்த யுனெஸ்கோ

புதுடில்லி, டிசெ. 11

இந்துக்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றான தீபாவளி யுனஸ்கோவின் அருவ கலாசார பாரம்பரிய பட்டியலில் இணைக்கப்பட்டது.

நேற்று புதன்கிழமை இந்தியாவின் புதுடில்லி செங்கோட்டையில் நடைபெற்ற யுனெஸ்கோவின் முக்கிய கூட்டத்தின்போது இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அருவ கலாசார பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கான அரசுகளுக்கு இடையேயான குழுவின் 20ஆவது மாநாடு தற்போது இந்தியாவில்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முள்ளியவளை - நெடுங்கேணி வீதி வழியே பயணிக்காதீர்கள்

### மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு

முல்லைத்தீவு, டிசெ. 11

முள்ளியவளை - நெடுங்கேணி வீதி நீரில் மூழ்கியுள்ளது. இதனால், இந்த வீதி வழியாக இரவுவேளையில் பயணிக்க வேண்டாம் என்று முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு எச்சரித்துள்ளது.

அத்துடன், இந்த வீதிக்குப் பதிலாக முள்ளியவளை - ஒட்டுசுட்டான் - நெடுங்கேணி வீதி வழியாக பயணிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் முதல் முல்லைத்தீவில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இந்த நிலையில், கோடாலிக்கல்லு குளத்தின் அணைக்கட்டு ஏற்கனவே உடைவுற்றமையால் நீரோட்டம் அதிகரித்துள்ளது. இதனாலேயே, கோடாலிக்கல்லு முன்புறத்தில் உள்ள முள்ளியவளை - நெடுங்கேணி வீதி நீரில் மூழ்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேற்று நாவலர் குருபூசை விழா!



யாழ்ப்பாணம், டிசெ. 11

ஆறுமுக நாவலர் குருபூசை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதலாவதாக கலாசாலையில் எழுந்தருளி உள்ள நாவலர் திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி வணக்கம் மேற்கொள்ளப்பட்டது.


இந்நிகழ்வில் அதிதி பேச்சாளராக சிவத்திரு விஷ்ணுகுமார் விஷ்ணுயன் கலந்துகொண் டார்.

அதிதிக்கான அறிமுக உரையை இந்து மன்றக் காப்பாளர் கு. பாலசண்முகன் ஆற்றினார். கலாசாலை அதிபர் நிறைவுரை ஆற்றினார்.

அதிதிப் பேச்சாளர் முகாமைத்துவ குழுவினரால் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டார். (ஐ)

## யாழ். வர்த்தகர் ரூ. 25 இலட்சம் நன்கொடை

### ஜனாதிபதியின் செயலரிடம் வழங்கினார்



யாழ்ப்பாணம், டிசெ. 11

இலங்கை மீள்கட்டமைப்பு நிதியத்துக்கு யாழ்ப்பாணத்தின் பிரபல வர்த்தகரான நர்மதா கோல்ட் சென்ரரின் தலைவர் என். ஜெகதீஸ்வரன் 25 இலட்சம் ரூபாய் நன்கொடை அளித்துள்ளார்.

டித்வா புயல் தாக்கத்தால் ஏற்பட்ட பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அரசாங்கம் "இலங்கை மீள்கட்டமைப்பு" நிதியத்தை ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டத்துக்கு பலரும் நன்கொடை வழங்கி வருகின்றனர். இந்த நிலையில், நர்மதா கோல்ட் சென்ரரின் தலைவர் நேற்றுமுன் தினம் ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்கவி டம் 25 இலட்சம் ரூபாயை வழங்கினார். இதேவேளை, இந்த நிதி யத்துக்கு இதுவரை 189 கோடி ரூபாய்க்கும் அதிக மான நிதி கிடைத்துள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் ஹர்சன சூரியப்பெரும தெரிவித்துள்ளார். (ஐ)

## இந்திய மீனவரின் அத்துமீறல்:

# ஜனாதிபதியை சந்தித்து பேச நேரம் கோரி மீனவர்கள் மனு

யாழ்ப்பாணம், டிசெ. 11

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியால் தாம் எதிர்கொள்ளும் பாதிப்புகள் தொடர்பிலும் இதற்கான தீர்வு தொடர்பில் கலந்துரையாட நேரம் ஒதுக்கி தருமாறும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவை கோரிய மனு ஒன்றை வடக்கு ஆளுநரிடம் மீனவர்கள் கையளித்துள்ளனர்.

வடக்கு ஆளுநர் நா.வேதநாயகனை ஆளுநர் செயலகத்தில் நேற்றைய தினம் சந்தித்த வடக்கு மீனவர்கள் இந்தக் கோரிக்கை கடிதத்தை வழங்கினர்.

பல்வேறு இடர்பாடுகளின் போதும் இந்திய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கி வருகின்ற உதவிகளுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ள அதே வேளை, இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத இழுவைமடி மீன்பிடி முறையால் வடக்கு மாகாண மீனவர்களின் வாழ் வாதாரம் மற்றும் கடல்வளம் என்பன எவ்வகையில் கடுமையாகப் பாதிக்கப் படுகின்றன என்பது குறித்தும் மனுவில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை நேரில் சந்தித்துக் கலந்துரையாட தமக்குச் சந்தர்ப்பம் ஒன்றை ஏற்படுத்தித் தருமாறும் வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தினர் அந்த மனுவில் கோரிக்கை விடுத்துள்ளனர். வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தால் கையளிக்கப் பட்ட மனுவை ஏற்றுக் கொண்ட ஆளுநர், அதனை உடனடியா கவே ஜனாதிபதியின் கவனத்துக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.(ஐ)



## கப்ரால் உட்பட 4 பேர் விடுதலை!

கொழும்பு, டிசெ. 11

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட 4 பிரதிவாதிகள், கிரேக்க பிணைமுறி தொடர்பான வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

2012 ஆம் ஆண்டில், கிரேக்கத்தில் நிலவிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், இலங்கை அரச நிதியை கிரேக்க பிணைமுறிகளில் முதலீடு செய்ததன் மூலம் அரசாங்கத்திற்கு 1.8 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நட்டத்தை ஏற்படுத்தியதாக இவர்கள் மீது இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எனினும், இந்த பிணைமுறை பரிவர்த்தனை மத்திய வங்கியின் விதிமுறைகளுக்கும், நிதி அறிக்கை விதிமுறைகளுக்கும் அமைய சட்டப்பூர்வமாக நடந்த ஒன்று என உயர்நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவு பிறப்பித்திருந்தது.

எனினும், இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு இது தொடர்பில் வழக்கை இரண்டாவது முறையாக தாக்கல் செய்தது நியாயமற்றது என்று ஜனாதிபதி சட்டத்தரணிகளான டிலான் ரத்நாயக்க மற்றும் நளின் லத்து ஹெட்டிஆரச்சி ஆகியோர் நீதிமன்றில் எழுத்துபூர்வ சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

இதன்படி, இந்த சம்பவம் தொடர்பில் நான்கு பிரதிவாதிகளுக்கு எதிராக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு தாக்கல் செய்திருந்த குற்றப்பத்திரிகை மீள பெறப்பட்டமையினால், மேல் நீதிமன்றம் அந்த பிரதிவாதிகளை குற்றமற்றவர்கள் என்று அறிவித்து விடுவிக்க உத்தரவிட்டது. (அ)

## வெள்ள நிவாரணத்தில் பாரபட்சம் கிராம சேவகர்மீது முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 11

அரசாங்கம் வழங்கும் 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவில் பாதிக்கப்பட்ட தன்னை புறக்கணித்து விட்டாரெனக் கூறி கிராம சேவகர் ஒருவருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவை சேர்ந்த கிராம சேவகர் ஒருவருக்கு எதிராகவே மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பணிமனையில் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கல்லுண்டாயில் உள்ள தனது வீடு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதாகவும் ஆனால், தான் அங்கு குடியிருக்கவில்லை என்று காரணம் காட்டி கிராம சேவகர் தனக்கு நிவாரண நிதியை தரவில்லை என்றும் அந்தப் பகுதியில் வீடுகளில் குடியிருக்காதவர்களுக்கும் நிவாரண நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும் முறைப்பாட்டாளர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ஐ-05)

## தண்ணிமுறிப்பு குளத்தின் விவசாயிகளுக்கான அறிவித்தல்

முல்லைத்தீவு, டிசெ. 11

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குளத்தின் நீர் மட்டம் தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது. இதனால், குளத்தின் வான் கதவுகளை திறக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, தண்ணிமுறிப்பு குளத்தின் கீழ்பகுதியில் வயல்களில் உள்ள அனைத்து விவசாயிகளும் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவித்துள்ளது. (ஐ)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு பசுமை இயக்கத்தால் உலருணவு பொதி



யாழ்ப்பாணம், டிசெ. 11

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் அற்றார் அழிபசி தீர்த்தல் செயல் திட்டத்தின்கீழ் டித்வா புயல் ஏற்படுத்திய வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொருளாதார ரீதியாக மிகவும் நலிவுற்றிருக்கும் குடும்பங்களில் முதல் கட்டமாக 110 குடும்பங்களைத் தெரிவுசெய்து அத்தியாவசிய உலருணவுகள் அடங்கிய பொதிகளை வழங்கியது.

யாழ். மாவட்டத்தின் தாழ்நிலப் பிரதேசங்களான நாவாந்துறை, கல்லுண்டாய் ஆகிய பகுதிகளில் இருந்து இந்தக் குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

உலருணவு பொதிகள் லக்ஷ்மி பிளாசா மண்டபத்தில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

இதற்கான நிதியை அமரர் பொ. பரமேஸ்வரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவரின் பிள்ளைகள் வழங்கியிருந்தனர். இந்நிகழ்ச்சியில் திருமதி பராசக்தி பரமேஸ்வ ரன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பொதுச்செயலா ளர் ம.கஜேந்திரன், உப பொதுச்செயலாளர் சண.தயாளன் ஆகியோர் கலந்துகொண்டு உலருணவுப் பொதிகளை வழங்கினர். (ஐ)

## பண்டாரவன்னி கிராம மக்களுக்கு எச்சரிக்கை

முல்லைத்தீவு, டிசெ. 11

தொடர் மழையால் குருவிச்சை ஆறு பெருக்கெடுத்து வெள்ளம் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, பண்டாரவன்னி கிராம மக்களை அவதானமாக செயல்படுமாறு முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவித்துள்ளது.

வவுனியா வடக்கில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் குருவிச்சை ஆற்றுப் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்படும் அபாய நிலை உள்ளது. எனவே, பண்டாரவன்னி பகுதியில் வசிக்கும் மக்கள் நிலைமையை கவனமாகக் கண்காணிக்க வேண்டும்.

வெள்ளம் அபாய மட்டத்துக்கு உயர்ந்தால் உடனடியாக கருவேலன்கண்டல் பாடசாலைக்கு பாதுகாப்பாக இடம்பெயருங்கள் - என்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவு எச்சரித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
11.12.2023 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், கார்த்திகை 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## சமூக ஊடக கட்டுப்பாடு

அவுஸ்திரேலிய அரசு 16 வயதுக்குக் குறைவானவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கு தடை விதித்திருக்கிறது. உலக நாடுகளில் இவ்வாறான தடை விதிக்கப்பட்டிருப்பது இதுவே முதன்முறையாகும். சமூக ஊடகங்களின் பயன்பாடு எல்லை மீறிவருவதன் விளைவாகவே அவுஸ்திரேலிய அரசாங்கம் இவ்வாறானதொரு நடவடிக்கையை முன்னெடுத்திருக்கிறது. சமூக ஊடகங்கள் இரு கூர்முனையுள்ள கத்தி போன்றவை - நல்ல நோக்கங்களுக்காக பயன்படுத்தினால் நன்மையான கருவியாகத் தொழில்படும் அதேவேளை. தீய நோக்கங்களுக்குப் பயன்படுத்தினால் சமூகத்தின் குரல்வளையை அறுக்கும் கருவியாகவும் தொழில்படும் ஆற்றல் கொண்டது. தமிழ்ச் சூழலில் சமூக ஊடகங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பது ஒரு சிறந்த உதாரணமாகும்.

கட்டுப்பாடற்ற சமூக ஊடகங்களின் பயன்பாடு எதிர்காலத்தில் பெரும் சீர்கேடுகளுக்கும் தவறான தகவல்கள் பரிமாற்றத்துக்கும் பெரியளவில் பங்களிக்கப் போகின்றன. அதாவது, செயற்கை நுண்ணறிவு (ஏ. ஐ.) சமூக ஊடகங்களில் தாக்கம் செலுத்தும்போது, எது உண்மை - எது பொய் என்று கண்டுபிடிக்க முடியாதளவுக்கு சமூகம் சீரழிய நேரிடும். இப்போதே உயிரோடு இருப்பவர்களின் இறப்பு நிகழ்வுகள் நடப்பது போன்ற காணொலிகள் பரப்பப்படுகின்றன. விழிப்புணர்வற்ற சமூகத்தில் இது ஒரு சமூக அச்சுறுத்தலாக மாறக்கூடிய ஆபத்து உண்டு. இவற்றைக் கருத்தில் கொண்டு அவுஸ்திரேலியாவை ஒரு முன்னுதாரணமாகக் கொண்டு அரசாங்கம் சமூக ஊடகங்கள்மீதான கட்டுப்பாடுகளை விதிப்பதை பரிசீலிப்பது நல்லது.

சமூக ஊடகங்களின் பெருக்கமும் அதன்மீதான மக்களின் ஈடுபாடும் தகவல்களை மிகவும் வேகமாகக் கொண்டு சேர்க்கின்றன. தகவல்களுக்காக நம்பகமான ஊடகங்களை நம்பியிருந்த நிலைமை மாறி சமூக ஊடகங்களையே அதிகம் பார்வையிடும் நிலைமை வேகமாக அதிகரித்து வருகின்றது. இதன் காரணமாக பொய்யான தகவல்கள் வேகமாகப் பரவுகின்றன. அதேவேளை பொய்யான முகநூல் கணக்குகளின் ஊடாக தனிநபர்கள் தாக்குதலில் ஈடுபடும் போக்கும் அதிகரித்து வருகின்றது.

இலங்கையில் முறையான சமூக ஊடகக் கண்காணிப்புகள் இன்மையே இதற்கான காரணமாகும். சீனா போன்ற நாடுகள் தொழில்நுட்பத்தில் மேற்குலகமே அச்சப்படுமளவுக்கு வளர்ச்சி அடைந்திருந்தாலும்கூட, சீனாவில் சமூக ஊடகங்களின் பயன்பாட்டை அரச கண்காணிப்புகள் கட்டுப்படுத்தியிருக்கின்றன. சீனாவின் தீர்மானம் அடிப்படையில் நாட்டின் பாதுகாப்புடன் தொடர்புடையது. அதாவது, சீனாவுக்கு எதிரான கருத்துகளைப் பரப்புவதற்கு சமூக ஊடகங்களைத் தங்களின் எதிரிகள் பயன்படுத்தலாம் என்னும் முன்னெச்சரிக்கையாகவே சீனா அவ்வாறான கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறது.

ஆனால், இலங்கை போன்ற நாடுகளின் பிரச்னை வேறு. சமூகத்தில் தவறான கருத்துகள் பரப்பப்படும்போது தேவையற்ற அச்சங்களும் சமூகப் பாதுகாப்பு இன்மையும் ஏற்படுகின்றது. அதேவேளை தீவிரவாத கருத்துகளை பரப்புவதற்கும் சமூக ஊடகங்கள் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. அண்மையில், இந்தியாவின் புதுடில்லியில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சமூக ஊடகங்களின் ஊடாகவே அனைத்து வலையமைபபுகளும் இயங்கியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதேவேளை, பயங்கரவாத அமைப்புகளுக்கான புதிய இளைஞர்கள், யுவதிகளை ஈர்ப்பதற்கும் சமூக ஊடகங்களே பெரியளவில் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறான பின்னணியில் நோக்கினால் இலங்கையில் சமூக ஊடகங்களை 16 வயதுக்கு உட்பட்டவர்கள் பயன்படுத்துவது தடுக்கப்படுவதுடன், சமூக ஊடகங்களைக் கண்காணிக்கும் பொறிமுறை ஒன்றும் உருவாக்கப்பட வேண்டியது அவசியமானது. இது தொடர்பில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

# டித்வா புயலின் தாக்கத்தினால் நாடு முழுக்க கழிவு பொருள்கள்

கொழும்பு, டிசெ. 11

டித்வா புயலால் பதிவான அதிக மழைவீழ்ச்சியால் ஏற்பட்ட அதிக வெள்ளப்பெருக்கு மற்றும் மண் சரிவு காரணமாக நாடு முழுவதும் கழிவுப் பொருட்கள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில், எதிர்பாராதளவுக்கு கழிவுகள் தோற்றம் பெற்றுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் பேராசிரியர் திலக் ஹேவாவசம் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான பிரதேசங்களில் வீடு மற்றும் கடைத் தொகுதிகள் உள்ள இடங்களில் பெருந்தொகை கழிவுகள் உருவாகியுள்ளதுடன், அவை தற்போதும் சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன.

அனர்த்தங்களின் காரணமாக எந்தளவு கழிவுத் தொகை தோற்றம் பெற்றுள்ளதென்பது தற்போது சரியாகக் கூற முடியாதென்று மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

ஒருசில பிரதேசங்களுக்குச் செல்ல முடியாத நிலைமை, சுத்தப்படுத்தல் செயற்பாடுகளில் காலதாமதம் அல்லது அவை தற்போதுவரை முடிவுக்குக் கொண்டுவரப்படாமை போன்று நடைமுறைப் பிரச்னைகளால் எவ்வளவு கழிவுகள் தோற்றம் பெற்றுள்ளன என்பதை மதிப்பீடு செய்ய முடியாத நிலை தோற்றம் பெற்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இருந்தபோதும், பேரிடர் காலப்பகுதியில் தோற்றம் பெற்ற கழிவுத்தொகையை முறையாக முகாமைத்துவம் செய்யவேண்டுமென்றால் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் தேவைபடலாமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டப் பகுதிகளின் அநேகமான பகுதிகளில் தற்போதுவரை வீதி போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதால் கழிவுகளை அந்தப் பிரதேசங்களிலிருந்து அகற்றுவதுகூட சிக்கலுக்குரிய விடயமாக மாறியுள்ளது.

அந்தக் கழிவுகளை அகற்றுவதற்காக உள்ளூராட்சி சபைகளுக்கு விரிவாக்கப்பட்ட விதிமுறைகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(அ)

## ரயில் சேவையில் தாமதம்!

கொழும்பு, டிசெ. 11

ரயில் பாதையின் அடியில் உள்ள மதகு, உடைந்ததால் அம்பேபுஸ்ஸ- அளவ்வ பிரதேசங்களுக்கிடையில் ரயில் சேவை ஒருவழிப் பாதையில் இயங்குவதாக இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் பிரதான மார்க்கத்தில் ரயில் தாமதமாக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, ரயில் தண்டவாளத்தின் கீழ் சுமார் 45 அடி ஆழமான பள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, ரயில் தண்டவாளத்தில் இருந்த தடைகளை அகற்றி, ரயில்வே திணைக்களம் ரயில் பாதையை மீண்டும் சீரமைக்க நடவடிக்கை எடுத்திருந்தது.

தற்போது, புனர்நிர்மாண வேலைகள் காரணமாக அம்பேபுஸ்ஸ - அளவ்வவுக்கு இடையில் ரயில் சேவை ஒருவழிப் பாதையில் மட்டுமே இயக்கப்படுகிறது. இதனால் பிரதான மார்க்கத்தில் பயணத் தாமதம் ஏற்பட்டுள்ளது. (அ)

## ரீபில்டிங் சிறிலங்கா திட்டத்துக்கு இதுவரை ரூ.1,893 மில்லியன் நிதி!

கொழும்பு, டிசெ. 11

டித்வா புயலால் ஏற்பட்ட பேரழிவிலிருந்து நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கில் செயல்படுத்தப்பட்ட ரீபில்டிங் சிறிலங்கா திட்டத்துக்கு இதுவரை ரூபா 1,893 மில்லியன் நிதியுதவி கிடைத்துள்ளதாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்துள்ளார்.

டித்வா புயலால் சேதமடைந்த வர்த்தகங்கள் மற்றும் சொத்துக்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான திட்டத்தை தயாரிப்பது குறித்து இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் தலைமையில் அனைத்து காப்புறுதி நிறுவனங்களின் தலைவர்களின் பங்கேற்புடன் கலந்துரையாடலொன்று நடைபெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த அனர்த்த சூழ்நிலையில் சேதமடைந்த வர்த்தகங்கள், சொத்துக்கள் மற்றும் உயிர்களுக்கு உடனடி இழப்பீடு வழங்குவதற்கான ஒரு பொறிமுறையை அனைத்து காப்புறுதி நிறுவனங்களும் ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த திட்டத்தின்படி, சொத்துக்களுக்கு ஏற்பட்ட சிறிய சேதங்களுக்கு உடனடி இழப்பீடு வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சொத்துக்களுக்கு ஏற்பட்ட பாரிய சேதங்களுக்கு இழப்பீடு வழங்குவதற்குத் தேவையான தகவல்களைச் சேகரித்த பின்னர் இழப்பீடு வழங்கப்படும் என்றும், அதுவரை இழப்பீட்டின் ஒரு பகுதி உடனடியாக வழங்கப்படும் என்றும் காப்புறுதி நிறுவன பிரதிநிதிகள் தெரிவித்ததாகவும் நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்தார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசெம்பர் - 11 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - காரத்திகை 25
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : சப்தமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். மகளுக்கு நல்ல வரன் அமையும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். தடைகளை தாண்டி வெல்லும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்களை நம்பி மூத்த அதிகாரி சில பொறுப்புகளை ஒப்படைப்பார்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். புதுமுடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டு விட்டோமே என்று முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**சிம்மம்**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். வெளி வட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் மோதல்கள் வரக்கூடும்.

**கன்னி**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சிறப்பான நாள்.

**துலாம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர் நண்பர்களால் ஆதாயம் உண்டு. குடும்பத்தில் பிரச்னைகள் தீரும். உத்தியோகத்தில் புது பொறுப்பை ஏற்பீர்கள். புகழ் கௌரவம் உயரும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் எதையோ இழந்ததை போல ஒருவித கவலைகள் வந்து செல்லும். வியாபாரத்தில் லாபம் மந்தமாக இருக்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும்.

**மகரம்**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. புதியவர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். புதுமை படைக்கும் நாள்.

**கும்பம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் நண்பர்களுடன்மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**மீனம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்றுநிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். புதுதொழில் தொடங்குவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

# யாழ். பல்கலையில் வெற்றிடங்களை நிரப்புமாறு கோரி தொழிற்சங்க சம்மேளனம் வேலைநிறுத்த எச்சரிக்கை!

கொழும்பு, டிசெ 11

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிலவும் போதனைசாராப் பணியாளர் வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், தவறின் தொழிற்சங்க நடவடிக்கைக்குத் தள்ளப்படுவோம் என்றும் அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர் சங்கங்களின் சம்மேளனம் எச்சரித்துள்ளது.

இதுதொடர்பில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர் சங்கங்களின் சம்மேளனம் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு-

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 355 போதனைசாராப் பணியாளர் வெற்றிடங்கள் நிலவுகின்றன. இவ் ஆளணி வெற்றிடங்கள் அனைத்தும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்க மைவானவை ஆகும்.

நாட்டிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் போதனைசாராப் பணியாளர் ஆட்சேர்ப்புச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தேவையான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதுடன், அந்தப் பல்கலைக்கழகங்கள் ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கமைவாக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

எனினும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆட்சேர்ப்புக்கான அங்கீகரிக்கப்பட்ட தாபன வழிகாட்டல்களை மீறி வேலைகள் உதவியாளர் மற்றும் வேறு சில வெற்றிடங்களைத் தனியார் நிறுவனம் ஊடாக நிரப்புவதற்கான முனைப்புகள் மேற்கொள்ளப்படுவதை நாம் அவதானிக்கிறோம்.

இந்த நிலைமை அப் பல்கலைக்கழகப் பணியாளர்களிடையே திருப்தியின்மையை ஏற்படுத்தியிருப்பதுடன், அதற்கெதிராகத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கும் அவர்கள் தயாராகவுள்ளனர்.

எனவே இது விடயத்தில் உடனடியாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலையிட்டு உரிய தீர்வை வழங்கத் தவறினால் நாம் நாடளாவிய தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை-என்று உள்ளது. (அ)

# யாழில் அனர்த்த பாதிப்பு கொடுப்பனவுகளை விரைவாக வைப்பிலிட அரச அதிபர் பணிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 11

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட உலர் உணவு நிவாரணக் கொடுப்பனவு மற்றும் ரூபா 25 ஆயிரம் கொடுப்பனவின் முன்னேற்ற நிலைமைகள் தொடர்பாக பிரதேச செயலாளர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

நிகழ் நிலை ஊடாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் நேற்று முன் தினம் மாலை குறித்த கலந்துரையாடலை முன்னெடுத்தனர்.

இதன்போது யாழில் உள்ள 15 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஒரே சீரான நடைமுறைகளைப் பின்பற்றி வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

குறித்த கடிதங்கள் மற்றும் சுற்றறிக்கைக்கு அமைய, கிராம மட்ட உத்தியோகத்தர்கள் மூலம் உரிய படிவத்தினை நிரப்பிய பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுப்பனவை வழங்குவதற்கு கிராம மட்ட அலுவலர்களோ பிரதேச செயலாளர்கள்களோ காலநீடிப்பினை மேற்கொள்ள வேண்டியதில்லை என தெரிவிக்கப்பட்டது.

மேலும் வீட்டு உரிமை இல்லாதவர்களுக்கும் தற்போது வசிக்கும் பிரிவுக்குரிய குடும்ப பதிவு அட்டை இல்லாதவர்களுக்கும் கிராம மட்ட உத்தியோகத்தர்களின் பொருத்தமான உறுதிப்படுத்தலுடன் கொடுப்பனவு வழங்கலாம் எனவும் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூபா 25 ஆயிரம் கொடுப்பனவு மற்றும் உலர் உணவுகள் வழங்குதலுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் முதலாம் கட்ட பெயர்ப் பட்டியலை காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தகுதியானவர்களின் பட்டியல்களை காட்சிப்படுத்திய பின்னர் காலதாமதம் இன்றி உரிய வங்கி கணக்கிற்கு விரைவாக வைப்பிலிட நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என அரசாங்க அதிபர் அறிவுறுத்தியதுடன், மேலும், ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாக எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளை கேட்டறிந்து உரிய அறிவுறுத்தல்களை வழங்கினார்.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன், மேலதிக அரசாங்க அதிபர் காணி பா.ஜெயகரன், திட்டமிடல் பணிப்பாளர் இ சுரேந்திரநாதன், உதவி மாவட்ட செயலாளர் உ.தர்சினி, அனர்த்த முகாமைத்துவப் பிரதிப்பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா, அனர்த்த நிவாரண சேவைகள் மாவட்ட இணைப்பாளர் ஆ. நளாயினி மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (அ)

# ரூ.10 இலட்சம் மதிப்புள்ள மருத்துவ பொருட்கள் மன்னார் வைத்தியசாலைகளுக்கு நன்கொடை!

**மன்னார் மறைமாவட்ட ஆயர் வழங்கினார்**

மன்னார், டிசெ. 11

நாட்டில் ஏற்பட்ட புயல் அதனை தொடர்ந்து ஏற்பட்ட கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக மன்னார் மாவட்ட மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களின் அவசர மருத்துவ தேவையைக் கருத்தில் கொண்டு, மன்னார் மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கு ஒரு மில்லியன் ரூபாய் மதிப்புள்ள மருத்துவப் பொருட்களை மறைமாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை மன்னார் ஆயர் இல்லத்தில் வைத்து நன்கொடையாக வழங்கினார்.

இதன்போது மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எம்.எச்.எம்.அஸாத், வைத்தியர் ரூபன் லெம்பேட் மற்றும் மருத்துவமனை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு மருத்துவ பொருட்களைப் பெற்றுக் கொண்டார்.

இதன்போது மன்னார் ஆயர் இல்ல நிதி பொறுப்பாளர் அருட்தந்தை சுரேன் ரவல் அடிகளாரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மன்னாரில் பிரபல உணவகம் மீது சுகாதாரத்துறையினர் நடவடிக்கை

மன்னார், டிசெ. 11

மன்னார் நகர் பகுதியில் இயங்கி வரும் பிரபல உணவகம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கையின் போது பல்வேறு சுகாதார குறைபாடுகள் அடையாளப்படுத்தப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவில் இயங்கி வரும் குறித்த உணவகத்தில் முன்னதாக பல சுகாதார குறைபாடுகள் அடையாளப்படுத்தப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் மீண்டும் சுகாதார குறைபாடுகளுடன் இயங்கி வந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

மன்னார் நகரசபை சுகாதார பரிசோதகர் மற்றும் மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை சுகாதார உத்தியோகத்தர்கள் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின்போது குறித்த உணவகம் சுகாதார குறைபாடுகளுடன் இயங்கி வந்துள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரமற்ற முறையில் உணவு தாயாரித்தமை, களஞ்சியப்படுத்தியமை, உணவகத்தின், சுத்தம் பேணப்படாமை, உணவு தாயாரிக்கும் ஊழியர்கள், கையுறை, தலையுறை பயன்படுத்தாமை போன்ற பல்வேறு சுகாதார குறைபாடுகள் அடையாளப்படுத்தப்பட்டது

இந்த நிலையில் குறித்த உணவகத்துக்கு எதிராக பல்வேறு பிரிவுகளில் சுகாதார அதிகாரிகளால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரிடருக்குப் பின்னர் சந்தைகளில் பாதுகாப்பற்ற உணவுப் பொருட்கள்!

## சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 11

**நாடு முழுவதும் பரவலான வெள்ளத்தை ஏற்படுத்திய சமீபத்திய மோசமான வானிலைக்குப் பிறகு, கெட்டுப் போன மற்றும் பாதுகாப்பற்ற உணவு சந்தைகளை அடை வதைத் தடுப்பதில் சுகாதார அதிகாரிகள் பாரிய சவாலை எதிர் கொள்கின்றனர்.**

பல மாவட்டங்களில் கால்நடைப் பண்ணைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு விலங்குகள் உயிரிழந்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், உயிரிழந்த விலங்குகளிடமிருந்து பெறப்பட்ட இறைச்சியை சில தனிநபர்கள் சந்தேகத்துக்கு இடமின்றி பொது மக்களுக்கு விற்க முயற்சிக்கக்கூடும் என்ற அச்சத்தைத் தூண்டுகிறது.

வெள்ள நீரில் மூழ்கிய பயிர்கள், காய்கறிகள், தானிய இருப்புக்கள், அரிசி மற்றும் பிற உணவுப் பொருட்கள் இப்போது சந்தைகளில் புழக்கத்தில் விடப்படலாம் என்று சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.

இந்தப் பொருட்கள் மீண்டும் சமைக்கப்படுவதோ, பதப்படுத்தப்படுவதோ அல்லது மறுவிற்பனை செய்யப்படுவதோ பொது சுகாதாரத்துக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக அவர்கள் எச்சரிக்கின்றனர்.

வார இறுதியில், கண்டியின் ஹரிஸ்பத்துவ பகுதியில் வெள்ளத்தால் சேதமடைந்த நுகர்வுக்கு தகுதியற்ற 1000 கிலோ அரிசியை பதப்படுத்தி விநியோகிக்கும் சட்டவிரோத நடவடிக்கையை பொது சுகாதார பரிசோதகர்கள் கண்டுபிடித்தனர்.

இதுபோன்ற நடவடிக்கைகளைத் தடுக்க நாடு முழுவதும் ஆய்வுகள் மற்றும் சந்தை கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் பிரதீப் பொரலெஸ்ஸ தெரிவித்தார்.

வெள்ளத்தால் சேதமடைந்த பொருட்களை விற்பனை செய்வதில் வணிகங்கள் ஈடுபட வேண்டாம் என்று அவர் வலியுறுத்தினார்.

மேலும் இந்த காலகட்டத்தில் உணவு, குறிப்பாக அரிசி மற்றும் இறைச்சி வாங்கும் போது நுகர்வோர் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று நினைவூட்டினார்.

எனவே, தகவல் தெரிந்தவர்கள் தங்கள் பகுதி பொது சுகாதார பரிசோதகர்கள் அல்லது சுகாதார அமைச்சின் 24 மணி நேர பேரிடர் முகாமைத்துவப் பிரிவின் துரித இலக்கமான 1926ஐ தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டார். (அ)

# பேரிடரினால் சேதமுற்ற மதத் தலங்களை சுத்திகரிப்பதற்கு ரூ. 25,000 கொடுப்பனவு

கொழும்பு, டிசெ. 11

அனர்த்தத்தினால் சேதமடைந்த விகாரைகள் மற்றும் மதத் தலங்களை சுத்திகரிப்பு செய்வதற்காக கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஊடாக 25,000 ரூபாய் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பதுளை மாவட்டத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அது தொடர்பில் இந்த வாரம் அமைச்சரவை முடிவு எடுக்கப்படவுள்ளது என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக இந்த வருடத்தில் அரசாங்கம் வழங்கிய நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்திச் சம்பந்தப்பட்ட அனைத்து மறுசீரமைப்புகளையும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யுமாறும் அந்த நிதி ஒதுக்கீடுகளை மீளத் திருப்பி அனுப்ப வேண்டாம் என்றும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவுறுத்தினார்.

இதேவேளை பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு அரசாங்கம் வழங்கும் 15,000 ரூபா கொடுப்பனவை உடனடியாக வழங்குமாறு ஜனாதிபதி பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

# இலங்கை மகாவலி அதிகார சபையின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கைது

கொழும்பு, டிசெ. 11

இலங்கை மகாவலி அதிகார சபையின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கீர்த்தி பி. கொட்டகம, இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ஷவுக்கு எதிராக, அரச சொத்துக்களைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்தியதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது. இந்த குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில், அந்த விசாரணைகளுக்கமைய அவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# தமிழக முதலமைச்சர் ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர் ஹேரத்!

கொழும்பு, டிசெ. 11

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு அவசர நிவாரணப் பொருட்களை அனுப்பியதற்காக தமிழக அரசுக்கு இலங்கை நன்றி தெரிவித்துள்ளது.

தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்ட வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், இந்த உதவிக்காக இலங்கை அரசின் சார்பில் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

அத்துடன், கடினமான காலகட்டத்தில் அரசின் ஒற்றுமையை இந்த ஆதரவு பிரதிபலிப்பதாக விஜித ஹேரத் கூறினார்.

மேலும், இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையிலான உறவுகள் தொடர்ந்து வலுப்பெறும்.

மீட்பு முயற்சிகள் முன்னேறும் போது நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு உதவுவதற்காக, அரிசி, பருப்பு வகைகள், பால் மா, சர்க்கரை, ஆடைகள் மற்றும் போர்வைகள் உள்ளிட்ட 950 மெற்றிக் தொன் மனிதாபிமான உதவிகளை தமிழ்நாடு அரசு அண்மையில் அனுப்பியது.

இந்த நிவாரணப் பொருட்கள் சென்னை மற்றும் தூத்துக்குடியில் இருந்து இந்திய கடற்படை கப்பல்கள் மூலம் அனுப்பப்பட்டன. (அ)

# இந்த வருடத்தில் இதுவரையில் 2,23,423 மோ.சைக்கிள்கள் பதிவு

கொழும்பு, டிசெ. 11

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களில் மோட்டார் சைக்கிள்களே அதிக எண்ணிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரை திணைக்களத்தில் 2,23,423 மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், இந்த காலப்பகுதியில் 55,338 கார்கள்,13,850 முச்சக்கர வண்டிகள் மற்றும் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கிய 35,268 மின்சார வாகனங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வாகன இறக்குமதிகள் அதிகரித்ததன் காரணமாக, மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்துக்கு இந்த ஆண்டுக்கான, வழங்கப்பட்ட வருமான இலக்கு எட்டப்பட்டுள்ளது. அத்துடன், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்துக்கு 16 பில்லியன் ரூபாய் வருமான இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில், கடந்த நவம்பர் 30 ஆம் திகதி நிலவரப்படி 17.8 பில்லியன் ரூபாய் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதுடன் எதிர்பார்த்த இலக்கும் கடக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டுக்கான வருமான இலக்காக திறைசேரியால் 18 பில்லியன் ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அந்த இலக்கை அடைவதற்கு மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் முழுமையாகத் தயாராக இருக்கிறது-என்றார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் இருந்து அம்பாறைக்கு 5 கோடி ரூபாய் மதிப்பிலான உதவி!

## திருமலைக்கு வந்த கப்பலில் இருந்து அனுப்பிவைப்பு


காரைதீவு, டிசெ. 12

இந்தியாவின் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் ஏற்பாட்டில் தமிழகத்தில் இருந்து அம்பாறை மாவட்டத்துக்கு 5 கோடி ரூபாய் மதிப்பிலான வெள்ள நிவாரணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்துக்கு தமிழ் நாட்டு உதவியில் 5 கோடி ரூபாய் பெறுமதியான நிவாரணப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

டித்வா சூறாவளி மற்றும் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு உதவியாக வழங்கும் பொருட்டு தமிழ் நாட்டு மக்களால் வழங்கப்பட்ட வெள்ள நிவாரண உலர் உணவுப் பொருட்கள் தற்போது திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

இவற்றில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒரு தொகுதியை அம்பாறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்குவதற்கு கொண்டு செல்லும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.



அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரமவின் ஆலோசனையின் பேரில் அங்கு சென்றுள்ள மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஏ. முனாஸிர் தலைமையிலான மாவட்ட செயலக அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினர் இப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சுமார் 5 கோடி ரூபா பெறுமதியான நிவாரணப் பொருட்கள் அம்பாறை மாவட்டத்திற்குக் கிடைக்கவுள்ளதாகவும் இதில் 100 தொன் சீனி, 100 தொன் பருப்பு, 2.5 தொன் பால்மா பைக்கற்றுகள், போர்வைகள் மற்றும் ஆடைகள் உட்பட மேலும் சில அத்தியாவசிய பொருட்களும் அடங்கியுள்ளதாக அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஏ. முனாஸிர் தெரிவித்தார்.

இதேவேளை இப்பொருட்களை ஏற்றி இறக்கும் பணியில் இலங்கை கடற்படையினர் உதவி வருவதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

# சீரற்ற வானிலை காரணமாக கிழக்கில் 10 பேர் உயிரிழப்பு!

## 45,420 குடும்பங்களை சேர்ந்த 147,885பேர் பாதிப்பு

மட்டக்களப்பு, டிசெ. 11

சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட பலத்த காற்று மற்றும் மழை வெள்ளப் பெருக்கினால் கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த நலன்புரி நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தகவல் வெளியிட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக கிழக்கு மாகாணத்தில் 10 பேர் உயிரிழந்ததுடன் 45,420 குடும்பங்களைச் சேர்ந்த 147,885 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 122 வீடுகள் முழுமையாகவும் 2,182 வீடுகள் பகுதியளில் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலருணவுப் பொருட்களை அரசாங்கம் மற்றும் பொது அமைப்புகள் வழங்கி வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலர் பிரிவுகளில் இருவர் உயிரிழந்ததுடன் 12,469 குடும்பங்களைச் சேர்ந்த 37,389 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பலத்த காற்றினால் இதுரை 11 வீடுகள் முழுமையாகவும் 946 வீடுகள் பகுதியளில் சேதமடைந்துள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்து இடைதங்கல் முகாம்களும் மூடப்பட்டடு மக்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் 11 பிரதேச செயலர் பிரிவை உள்ளடக்கிய 214 கிராம சேவகர் பிரிவுகளில் 26,009 குடும்பங்களைச் சேர்ந்த 86,685 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இதுரை 727 வீடுகள் பகுதியளில் சேதமடைந்துள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் 08 பேர் உயிரிழந்ததுடன் 6,942 குடும்பங்களைச் சேர்ந்த 23,781 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இதுரை 111 வீடுகள் முழுமையாகவும் 509 வீடுகள் பகுதியளில் சேதமடைந்துள்ளன. (அ)

# மட்டக்களப்பில் 4,000 கோழிகள் 400 மாடுகள், 400 ஆடுகள் இறப்பு

மட்டக்களப்பு, டிசெ. 11

அண்மையில் ஏற்பட்ட பெரு வெள்ளம் மற்றும் சூறாவளி காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 4, 000 கோழிகளும் 400 மாடுகள், 400 ஆடுகள் உயிரிழந்ததாக மட்டக்களப்பு மாவட்ட கால்நடை அபிவிருத்தி சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஏ. எம். அப்துல் ஹாதி தெரிவித்தார்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலக பிரிவுகளிலும் அனர்த்த நிலை காரணமாக கால்நடைகள் உயிரிழந்தன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கான விசேட மருத்துவ முகாம் வாகரை பிரதேச செயலக பிரிவிலுள்ள கட்டுமுறிவு, ஆண்டாள் குளம், கதிரவெளி ஆகிய இடங்களில் நடைபெற்றன.

இந்த மருத்துவ முகாமில் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட விலங்குகள் மற்றும் கோழிகள் என்பன பரிசோதிக்கப்பட்டதுடன் அவற்றுக்கு ஏற்பட்டுள்ள நோய்களிலிருந்து அவற்றை பாதுகாக்க மருந்துகளும் விநியோகிக்கப்பட்டன. (எ)

# நுவரெலியாவில் காய்கறிகளுக்கு தட்டுப்பாடில்லை

நுவரெலியா, டிசெ. 11

நுவரெலியாவில் காய்கறிகளுக்கு தட்டுப்பாடு இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

டித்வா சூறாவளியால் நுவரெலியா மாவட்டத்தில் விவசாயத் துறைக்கு ஏற்பட்ட சேதம் குறித்து ஆராய்வதற்கும் இது தொடர்பாக எடுக்க வேண்டிய அவசர நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்குமான விசேட மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று முன்தினம் காலை நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

சீரற்ற காலநிலை காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் 1,421 ஹெக்ரேயர் காய்கறி பயிர்ச் செய்கைகள் சேதமடைந்துள்ளன.

இந்த நிலையில் விவசாயிகளுக்கு உடனடியாக இழப்பீடு வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

பயிர்கள் சேதமடைந்ததால் நுவரெலியா மாவட்டத்தில் காய்கறி அறுவடை சுமார் 25 சதவீதம் குறைந்துள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

நுவரெலியா மாவட்டத்துக்கு நாளாந்த காய்கறி விநியோகத்தை மேற்கொள்ள முடிந்துள்ள போதும் நாளாந்த கேள்வியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நுவரெலியா மாவட்டத்தில் காய்கறிகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும், விலைகள் அதிகரித்துள்ளதாகவும் பரப்பப்படும் தவறான செய்தியே இதற்குக் காரணம் என்றும் அதிகாரிகள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினர். (எ)

# மலையக மக்களுக்கு காணிகளை விடுவிக்குமாறு ஜீவன் கோரிக்கை

நுவரெலியா, டிசெ. 11

மலையக பெருந்தோட்ட மக்களுக்கு காணிகளை விடுவிக்குமாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டபோதே அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளதாக தெரிவித்தார்.

கொட்டகலை, லொகி தோட்டப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பிள்ளைகளுக்கு, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ, கொட்டகலை பிரதேச சபை தவிசாளர் ராஜமணி பிரசாத் மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான்,

"ஒவ்வொரு குடும்பங்களுக்கும் சொந்த காணிகள் இருக்கும் பட்சத்தில் எமது வாழ்க்கைத்தரம் உயர்வடையும். தேர்தல் காலங்களில் நாம் சலுகைகளை நம்பிப் பின்னால் சென்றுகொண்டிருக்கின்றோம். அனைவருக்கும் வீடமைப்பு திட்டத்தை மேற்கொள்வதென்பது சாத்தியமற்ற விடயம்" எனவும் தெரிவித்தார். (எ)

# தொப்பிகல, நாவலடி மக்களுக்கு இராமகிருஷ்ண மிசன் உதவிகள்




மட்டக்களப்பு, டிசெ. 11

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிசன் சமகால பெரு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மட்டு. மாவட்டத்தின் தொப்பிகல மற்றும் நாவலடியில் பாதிக்கப்பட்ட 260 குடும்பங்களுக்கு உலருணவுப்பொதிகளை நேற்று வழங்கியது.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் உதவிப் பொது முகாமையாளர் சுவாமி உமாதீஷானந்தா ஜீ மஹராஜ் நேரில் சென்று நேற்று புதன்கிழமை வழங்கினார்.

இதேவேளை, மலையக பெருந்தோட்ட பகுதிகளில் இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு மாநில பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ் கடந்த ஒரு வார காலமாக அங்கு தங்கி இருந்து 12 முகாம்களுக்கான நிவாரணங்களை வழங்கி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# சீல் வைக்கப்பட்டது உணவகம்



அம்பாறை, டிசெ. 12

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தினால் கடந்த சனிக்கிழமை கைப்பற்றப்பட்ட தரமற்ற மற்றும் பாவனைக்கு ஒவ்வாத உணவுகள் தொடர்பான வழக்கு நேற்று சம்மாந்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

உணவுப் பாதுகாப்பு மற்றும் பொது சுகாதாரத்தை பேணும் விதமாக நீதிமன்றம் உணவக உரிமையாளருக்கு 48,000 ரூபா அபராதம் விதித்ததுடன் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை உணவகத்தை மூடி, அனைத்து திருத்த வேலைகளையும் சுகாதார விதி முறைகளுக்கு அமைய செய்ய உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்றத்தின் இந்த உத்தரவின் பிரகாரம்,சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குழுவினர் நேற்று சம்பந்தப்பட்ட உணவகத்தை முறையாக மூடி சீல் வைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டாபய...

நேற்றைய தினம் நடந்த வழக்கில் கோட்டா பய ராஜபக்ஷ நிகழ்நிலை ஊடாக முற்பட்டு சாட்சியம் அளிப்பதற்கு மன்றில் விண்ணப்பம் செய்திருந்தார்.

இதனால், கோட்டாபய ராஜபக்ஷ யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவதில் உள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தொடர்பில் சத்திய கடதாசியை மன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் அடுத்த வழக்கு விசாரணையை அடுத்த ஆண்டு பெப்ரவரி 6ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஐ)

## பேரிடர்...

தற்போதுள்ள 893 வீடுகளுக்குப் பதிலாக ஆயிரத்து 216 வீடுகளை சுத்தம் செய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டியே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

நேற்றைய தினம் கொழும்பில் தனது பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், டித்வா சூறாவளியின் தாக்கம் யாழ்ப்பாண மாவட்டத்திலும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது. அங்குள்ள பல பிரதேச செயலர் பிரிவுகளில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் 16 ஆயிரத்து 312 குடும்பங்களைச் சேர்ந்த 51 ஆயிரத்து 879 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர், இரு வீடுகள் முழுமையாகவும் 322 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்று அனர்த்த முகாமைத்து மத்திய நிலையத்தின் சமீபத்திய தரவுகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சூழலில், அரசாங்கம் சமீபத்தில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகளை சுத்தம் செய்வதற்காக 25 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியுள்ளது. இதன்படி, யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 36 கோடியே 14 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இதில், ஆயிரத்து 216 வீடுகளுக்கு நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் 3 கோடியே 4 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், 2024 மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவர அறிக்கையின்படி நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை 893 ஆகும். நிலைமை இவ்வாறிருக்க மாவட்ட செயலகத்தால் நெடுந்தீவில் 1,216 வீடுகளுக்கு எவ்வாறு நிவாரணம் கோர முடியும்? இதனூடாக, அரச அதிகாரிகள் மோசடியில் ஈடுபட்டுள்ளனர் - என்றார். (ஐ)

## 1,216...

வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் கோரப்பட்டதற்கு அமையவே மாவட்ட செயலகத்துக்கு தரவுகள் வழங்கப்பட்டன. இதற்கமைய, நெடுந்தீவில் 901 வீடுகள் சேதமடைந்தன, ஆயிரத்து 216 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன என்றே தகவல் வழங்கப்பட்டது.

எனினும், மாவட்ட செயலகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் 901 வீடுகளுக்குப் பதிலாக ஆயிரத்து 216 வீடுகள் என குறிப்பிடப்பட்டிருந்தது. முதலாவது சுற்றறிக்கையில் காணப்பட்ட குழப்ப நிலையே இதற்குக் காரணம்.

பேரிடர் காலத்தில், தீவுக்கும், நகருக்குமான தொடர்புகளை பேணுவதில் பெரும் சிக்கல் காணப்பட்டிருந்தது - என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தார். (ஐ)

## நீதி...

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் வடக்கு, கிழக்கில் போராட்டங்களை முன்னெடுத்தன. இதன்போதே, ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியது.

மேலும் அந்தக் கடிதத்தில், 1948இல் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த நாள் முதல், தமிழர்கள் படிப்படியாக ஓரங்கட்டப்பட்டு - ஒடுக்கப்பட்டு - உரிமைகள் மறுக்கப்பட்டு - இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2009 மே மாதம் முள்ளிவாய்க்காலில் மிகவும் கொடூரமான இனப்படுகொலை நடைபெற்றது. சரணடைந்தவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்ற பொய்யான வாக்குறுதியை நம்பி சரணடைந்த 29 குழந்தைகள் உட்பட குடும்பமாகச் சரணடைந்தவர்களும் உறவுகளால் கையளிக்கப்பட்டவர்களும் காணாமல் ஆக்கப்பட்டனர்.

இந்தத் தொடர்ச்சியான சோகத்தை சர்வதேச சமூகம் கருத்தில் எடுக்கத் தவறிவிட்டது ஏன்? தற்போதைய அரசாங்கம் ஒரு வருடமாக அதிகாரத்தில் உள்ள போதிலும் இதுவரை நீதி வழங்கப்படும் என்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை.

நாட்டின் பொருளாதாரம் மற்றும் டித்வா புயல் போன்ற காரணங்களால் அரசாங்கத்துக்கு எங்கள் விடயத்தில் கவனம் செலுத்த நேரமில்லை. இனத்துவேசத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தும் அரசியல் கட்சிகள் இருக்கும் வரை, எந்தவொரு ஜனாதிபதியும் எதிர்ப்புகளை மீறி எமக்கு நீதியை வழங்கத் தயாராக இருக்க மாட்டாது.

எனவே, எங்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான பொறுப்பேற்பு சர்வதேச விசாரணை மூலமே காலதாமதமின்றி வர வேண்டும். இனப்படுகொலை, சர்வதேச குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களுக்காக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும்", என்றும் வலியுறுத்தியுள்ளது. (ஐ)

## வடக்கின்...

எதிர்வு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட காலநிலை அவதானிப்பு அறிக்கையில்,

"நாட்டின் தென்கிழக்கே நிலவும் காற்றுச் சுழற்சி மற்றும் தென்மேற்கு பகுதியில் நிலவும் வளிமண்டல தளம்பல் நிலை காரணமாக தற்போது கிடைத்து வரும் மழை நாளை வரை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு மாகாணத்தின் பல இடங்களிலும் 18 மணித்தியாலங்களுக்கு மேலாக மழை கிடைத்து வருகிறது - தொடர்ந்தும் கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. குளங்கள் பலவும் வான் பாய்கின்றன. ஆறுகளும் அவற்றின் கொள்ளளவை எட்டியுள்ளன. ஆகவே மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் தாழ்நில பகுதியில் உள்ள மக்கள் வெள்ள அபாயம் தொடர்பாக அவதானமாக இருப்பது அவசியம். குறிப்பாக குளங்களின் கீழ்ப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிக அவதானமாக இருப்பது அவசியம்.

குறிப்பாக, யாழ்ப்பாண மாவட்டத்துக்கு தொடர்ந்து சில மணி நேரங்களுக்கு கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. ஆகவே, யாழ்ப்பாணம் நகரை அண்மித்த தாழநிலப்பகுதி மக்கள், ஏனைய தாழ் நிலப்பகுதிகளில் பகுதிகளில் உள்ள மக்களும் அவதானமாக இருப்பது சிறந்தது. வெள்ள நிலைமைகளை அவதானித்து முன்கூட்டியே பாதுகாப்பான இடங்களுக்கு செல்வது சிறந்தது.

மன்னார் மாவட்டத்துக்கு நீரை கொண்டு வரும் பாலியாறு, பறங்கியாறு போன்றவற்றின் நீரேந்து பிரதேசங்களில் மழை கிடைத்து வருகின்றது. எனவே, இப்பகுதிகளில் உள்ள மக்களும் அவதானமாக இருப்பது அவசியம். கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் நாளை வரை கனமழை தொடரும்.

மத்திய, தென், ஊவா, சப்ரகமுவ மாகாணங்களிலும் மழை தொடர்ந்து கிடைக்கும் வாய்ப்புள்ளது. எனவே, இப்பகுதிகளில் உள்ள மக்கள் வெள்ளம், நிலச்சரிவு தொடர்பாக அவதானமாக இருப்பது அவசியம் - என்றுள்ளது. (ஐ)

## காணாமலாக்கப்பட்ட...

போராட்டங்களை நடத்தினர்.

வடக்கில் வவுனியா மாவட்டத்தில் இந்த கவன வீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பழைய பேருந்து நிலையம் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கில், அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் - தம்பிலுவில் பொதுச்சந்தைக்கு அருகே போராட்டம் நடைபெற்றது.

இந்த இரு போராட்டங்களிலும் போராட்டக்காரர்கள் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் புகைப்படங்கள் - நீதி கோரிய பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதேநேரம், அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் பௌத்த மயமாக்கலுக்கு எதிராகவும் போராட்டக்காரர்கள் குரல் கொடுத்தனர்.

அத்துடன், சர்வதேச நாடுகள் மனித உரிமை தினத்திலாவது தங்களுடைய துன்பங்களை புரிந்து கொண்டு தமக்கான தீர்வைப் பெற்றுத் தருவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்", என்றும் கோரிக்கை விடுத்தனர்.(ஐ)

## படகில்...

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

உயிரிழந்த நபர் நெடுந்தாரகை பயணிகள் படகில் தேங்காய் மூடையுடன் ஏற முயன்றுள்ளார். அப்போது படகின் கயிறு தடக்கியதில் அவர் கடலில் விழுந்து மூழ்கியுள்ளார். அங்கு நின்றவர்கள் அவரை காப்பாற்ற முயற்சி செய்த போதிலும் அவரின் சடலத்தையே மீட்க முடிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மணல்...

நேற்று புதன்கிழமை நண்பகல் இடம்பெற்ற இந்த விபத்து குறித்து மேலும் அறிய வருபவை வருமாறு,

உயிரிழந்த நபர் தனது மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார். மொட்டை பாலம் அருகே அவர் மோட்டார் சைக்கிளை வீதியின் ஓரமாக நிறுத்தியுள்ளார். அந்தச் சமயம் பின்புறமாக வேகமாக டிப்பர் வந்துள்ளது. டிப்பரை கண்ட அவரின் மனைவி மறுபுறம் ஓடியுள்ளார்.

அப்போது, மோட்டார் சைக்கிளில் நின்றவரை மோதித்தள்ளியது. இதில், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் திருவையாறில் இடம்பெறும் மணல் கடத்தல்களுக்கு எதிராக செயல்பட்டவர்.
சட்டவிரோத மணல் அகழ்வுகள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளும் அளித்துள்ளார் என்று கூறிய அவரின் உறவினர்கள், இது திட்டமிடப்பட்ட விபத்தாக இருக்கலாம் என்றும் சந்தேகம் தெரிவித்தனர். (ஐ)

## இரணைமடு...

கூறினார்.

அத்துடன், பேரிடரால் கிளிநொச்சி மக்களுக்கான கொடுப்பனவுகள் துரிதகதியில் வழங்கப்படுகிறது. அத்துடன், பேரிடரால் மாவட்டத்தில் சுமார் 6 ஆயிரம் கால்நடைகள் இறந்தன. இது தொடர்பிலும் பதிவுகள் நடைபெறுகின்றன.

வன்னி மாவட்டத்தில் கிடைக்கும் கனமழையால் இரணைமடுக் குளத்தின் 8 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. கிடைக்கும் மழையின் அளவைப் பொறுத்து வான் கதவுகளை மேலும் திறப்பதா அல்லது பூட்டுவதா என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும். தாழ்நிலப் பகுதி மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## பதுளையில்...

ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

முன்னெச்சரிக்கையாக அந்தப் பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டிருந்தனர். ஒரு சில குடும்பங்களே அங்கே தங்கியிருந்தன. எனினும், உயிரிழப்புகள் அல்லது சொத்து அழிவுகள் எவையும் பதிவாகவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், பதுளை - மகியங்கனை பிரதான வீதியில் மண்மேடுகள் இடிந்து விழுந்துள்ளன. இதனால், அந்த வீதி ஊடாக பயணிப்பது மிகச்சிரமமாக மாறியுள்ளது. சாரதிகள் கவனமாக வாகனங்களை செலுத்த வேண்டும் என்று பொலிஸார் அறிவுறுத்தியிருந்தனர். (ஐ)

## வடக்கு, கிழக்கு...

என்றும் அவர் கூறினார்.

மேலும், பேரிடரால் சகல பிரதேசங்களுக்குமான புகையிரத பாதைகள், பாலங்கள் சேதமடைந்துள்ளன. புகையிரத சேவைகள் தற்போது வரையறுக்கப்பட்ட வகையில் செயல்படுத்தப்படுகின்றன.

இறம்புக்கனை, பொல்காஹெவல ஆகிய பகுதிகளின் புகையிரத பாதைகள் புனரமைக்கப்பட்டுள்ளன. கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து இந்த பகுதிகளுக்கான அலுவலக புகையிரத சேவைகள் இன்று (நேற்று) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கு, மலையகத்துக்கான புகையிரத சேவை எப்போது மீள ஆரம்பிக்கப்படும் என்று குறிப்பிட முடியாது. மலையகத்துக்கான புகையிரத பாதைகள் பெருமளவில் சேதமடைந்துள்ளன. குறிப்பாக மாத்தளை - கண்டி புகையிரத பாதைகள் மிக மோசமாக சேதமடைந்துள்ளன.

மலையக புகையிரத பாதைகள் மற்றும் பாலங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதத்தை மதிப்பிட இன்னுமும் 2 மாதங்களேனும் செல்லும். பேரிடரால் புகையிரத திணைக்கள சொத்துகளுக்கு (பாலம், வீதிகள், சமிஞ்ஞை கட்டமைப்பு, புகையிரத நிலையங்கள்) 30 கோடிடொலர் வரையில் சேதம் ஏற்பட்டுள்ளது. புகையிரத சேவையை இயலுமான வகையில் வழமைக்கு கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் - என்றார். (ஐ)

## தீபாவளியை...

நடைபெற்று வருகிறது. இந்த மாநாட்டை இந்தியா நடத்துவது இதுவே முதன்முறையாகும்.

இந்தக் குழு அமர்வு கடந்த 08ஆம் திகதி ஆரம்பமானநிலையில் நாளை மறுதினம் நிறைவடைகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பேரிடரால் பாதிப்புற்ற விவசாயிகளுக்கு இம்மாத இறுதிக்குள் இழப்பீடு கிடைக்கும்

கொழும்பு, டிசெ. 11

வெள்ளம் மற்றும் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் இந்த மாத இறுதிக்குள் இழப்பீட்டுத் தொகையை முழுமையாக வழங்க அரசாங் கம் திட்டமிட்டுள்ளதாக விவசாய, கால்நடை வளங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

விவசாய, கால்நடை வளங்கள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இழப்பீட்டுத் திட்டத்தின் கீழ், நெல், காய்கறிகள், கௌப்பி, பாசிப்பயறு, உளுந்து, சோளம், வாழை, மிளகாய், கிழக்கு மற்றும் வெங்காயம் உள்ளிட்ட அனைத்துப் பயிர்களும் அடங்குகின்றன.

காய்கறிகளுக்கான இழப்பீட்டுத் தொகை ஒரு ஹெக் ரேயருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் எனவும், மற்ற பயிர்களுக்கு ஒரு ஹெக்ரேயருக்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டு, உரிய மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் மணல் அல்லது சேறு படிந்து, அல்லது மேற்பரப்பு மண் அரிக்கப்பட்டுச் சேதமடைந்த பயிரிடப்படாத வயல்களுக்கும் இழப்பீடு வழங்கப்படுகிறது.

இவ்வாறான நிலங்களில் இந்தப் பெரும்போக பருவத்தில் பயிரிட முடியாது. அவ்வாறான விவசாயிகளுக்கும் நட்டஈடு வழங்கப்படும். அதேநேரம், கால்நடை வளர்ப்புச் சேதங்களுக்கும் இழப்பீடு வழங்கப்படவுள்ளது. (அ)

# எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் அனர்த்த தகவல் மையம் அங்குரார்ப்பணம்!

கொழும்பு, டிசெ. 11

சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் மற்றும் பேரிடரால் பாதிக்கப்பட்டோர்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கும் முகமாக கொழும்பு 7, மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தையில் அமைந்து காணப்படும் எதிர்க்கட்சி அலுவலகத்தில் அனர்த்த தகவல் மையமொன்று நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

பேரிடரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இதுவரை தீர்க்கப்படாது காணப்படும் பிரச்னைகளை கிராம அலுவலர் மட்டத்தில் ஒன்று திரட்டுவதே இதன் பிரதான நோக்கமாக அமைந்து காணப்படுகின்றன.

பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் பிரச்னைகள் மற்றும் தேவைகளை இந்த தகவல் மையத்துக்கு தொலைபேசி அழைப்புகள் மூலம் நேரடியாகத் தெரிவிக்கலாம் அல்லது வட்ஸ் அப் மூலம் அனுப்பி வைப்பதற்கான வசதிகளும் இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் நிமித்தம் கீழ் காணும் தொலைபேசி இலக்கங்களை நீங்கள் பயன்படுத்தலாம்.

0759 570 570, 0761 660 570, 0705 699 110

தகவல் மையத்துக்கு கிடைக்கப்பெறும் தகவல்களை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைப்பதற்கு இந்த மையம் உரிய நடவடிக்கை எடுக்கும். இந்த தகவல் மையம் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை இயங்கும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ)

# வளர்ப்பு நாயின் உதவியால் மீட்கப்பட்ட ஏழு சடலங்கள்!

## மாத்தளையில் துயரம்

கொழும்பு, டிசெ. 11

மாத்தளை, பல்லேபொல பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அம்பொக்க கிராமத்தில் அண்மையில் ஏற்பட்ட மண்சரிவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் உயிரிழந்த நிலையில், அவர்களது சடலங்கள் மீட்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மீட்புப் பணியின்போது, உயிரிழந்த குடும்பத்தின் செல்லப் பிராணியான நாய் ஒன்று, மீட்புப் பணியாளர்களை அதன் உரிமையாளர்கள் புதையுண்ட இடத்துக்கு வழிகாட்டி உதவியதாகவும், பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த செல்லப்பிராணியின் விசுவாசம் பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளதுடன் நெகிழச் செய்துள்ளது.

எவ்வாறாயினும், உயிரிழந்தவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டபோதிலும், பாதிக்கப்பட்ட இடம் இன்னும் முழுமையாக மண்சரிவுகளால் மூடப்பட்டிருப்பதாகவும், வீட்டின் எச்சங்களைக் கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் அந்த பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# டித்வா பேரிடர் குறித்து ஆராய்வதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழு வேண்டும்!

## சம்பிக்க ரணவக்க கோரிக்கை

கொழும்பு, டிசெ. 11

டித்வா புயலினால் ஏற்படும் பேரிடர் தொடர்பில் வளிமண்டளவியல் திணைக்களத்தால் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தப்பட்டதா என்பது பற்றி ஆராய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய குடியரசு முன்னணி தலைவர் பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

மேற்படி குழுவின் தலைமைப் பதவி எதிரணிக்கு வழங்கப்படவேண்டும் எனவும் அவர் கூறினார்.

“வளிமண்டளவியல் திணைக்களத்துக்கு விஞ்ஞானப் பூர்வமான தகவல்கள் நவம்பர் 24, 25 ஆம் திகதிகளில் கிடைத்திருக்கும் என நம்புகின்றேன்.

எனவே, தேசிய அனர்த்த நிலையை பிரகடனப்படுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இழப்புகளை குறைத்திருக்கலாம்.

இந்நிலை தொடர்பில் வளிமண்டளவியல் திணைக்களத்தால் ஜனாதிபதி செயலர் ஊடாக ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தப்பட்டதா, அவ்வாறு தெரியப்படுத்தி இருந்தால் ஏன் முன்னாயத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை, தெரியபடுத்தவில்லையெனில் அதற்குரிய காரணம் என்ன என்பன பற்றி ஆராய்வதற்கே மேற்படி தெரிவுக்குழு அவசியம்.” எனவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டார். (அ)

# பேரிடரினால் பாதிக்கப்பட்ட பொதுக்கட்டடங்களை புனரமைக்கவும் கொடுப்பனவு வழங்கப்படவேண்டும்

## இம்ரான் எம்.பி. கோரிக்கை

திருமலை, டிசெ. 11

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பொதுக்கட்டிடங்களை சுத்தப்படுத்துவதற்கும் கொடுப்பனவுகளை வழங்குவது குறித்து அரசாங்கம் கவனத்தில் கொள்ளவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியா சோலைவெட்டுவான் கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெள்ள அனர்த்தித்தின் பாதிப்பில் இருந்து மீள அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இது பாதிக்கப்பட்டோருக்கு சற்று நிம்மதியைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு வழங்கப்படும் நடைமுறையில் நெகிழ்வு தன்மைகள் பேணப்படவேண்டியுள்ளது. சில வரையறைகளால் அரச அதிகாரிகள் குறிப்பாக கிராம உத்தியோகத்தர்கள் அரசுக்கும் மக்களுக்கும் இடையில் பணி செய்வதில் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

அதுபோன்று வீடுகளை சுத்தம் செய்ய வழங்கப்படும் கொடுப்பனவு பாதிக்கப்பட்ட மதத் தளங்கள், முன் பள்ளிகள், கிராமங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்றவற்றுக்கும் வழங்கப்பட வேண்டும். இது குறித்து அரசு கவனம் செலுத்த வேண்டும்-என்றார். (அ)

# தரம் 6 மாணவர் அனுமதி விண்ணப்ப காலம் நீடிப்பு

கொழும்பு, டிசெ. 11

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாக தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையின் மீள்பரிசீலனைப் பெறுபேறுகளின் அடிப்படையில், 6 ஆம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிப்பதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு நீடிக்கப்பட்டுள்ளது.

ஒன்லைன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முறை டிசெம்பர் 05 ஆம் திகதிக்குப் பின்னர் செயலிழக்கச் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அனர்த்த நிலைமை காரணமாக டிசெம்பர் 12 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

2026 ஆம் ஆண்டில் பாடசாலைகளில் 6 ஆம் தரத்துக்கு அனுமதி பெறுவதற்கான முதலாவது மேன்முறையீடுகளைச் சமர்ப்பிக்கும் நடவடிக்கைகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை எனவும், அது தொடர்பில் சமூக ஊடகங்களில் பரவும் செய்திகள் பொய்யான பிரசாரங்கள் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தரம் 06இற்கான முதல் சுற்று சேர்க்கை ஜனவரி 2026 இல் நடைபெறுமெனவும் இந்த சேர்க்கைகள் முடிந்த பின்னரே மீதமுள்ள வெற்றிடங்களை நிரப்ப விண்ணப்பங்களைக் கோரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அதிபர், ஆசிரியர்கள் 15 ஆம் திகதி சேவைக்கு சமுகமளிக்கவேண்டும்

கொழும்பு, டிசெ. 11

எதிர்வரும் டிசெம்பர் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் பாடசாலைகளிலுள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள் அனைவரும் எதிர்வரும் 15 ஆம் திகதி சேவைக்கு சமுகமளிக்கவேண்டும் என கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக்க கலுவெவ தெரிவித்துள்ளார்.

கல்வியமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மாணவர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் சீருடை விடயத்தில், தளர்வான கொள்கை பின்பற்றப்படும். நாடளாவிய ரீதியிலுள்ள 10,076 பாடசாலைகளில், 9,929 பாடசாலைகள் எதிர்வரும் 16 ஆம் திகதி திறக்கப்படும்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு, உடனடியாகத் திறக்க முடியாத நிலையில் 147 பாடசாலைகள் உள்ளன.

மாகாண மட்டத்தில் பெறப்படும் இறுதி தகவல்களின் அடிப்படையில், இந்த எண்ணிக்கையில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து தொடர்ச்சியாக உத்தியோகபூர்வ அறிவிப்புகள் வெளியிடப்படும். 2025ஆம் ஆண்டின் மூன்றாம் தவணைக் காலத்தின் இரண்டாம் கட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரையும், கிறிஸ்துமஸ் விடுமுறைக்குப் பின்னர் மீண்டும் 29ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரையும் நடைபெறும்-என்றார். (அ)

# அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக விசேட திட்டம்

கொழும்பு, டிசெ. 11

சமீபத்திய அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்றை அறிவித்துள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த அனர்த்தங்களால் 100,000 இற்கும் அதிகமான சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதிகபட்சமாக, புத்தளம் மாவட்டத்தில் 43,000 சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதைத் தொடர்ந்து, கொழும்பு மாவட்டத்தில் 14,077 சிறுவர்களும் குருநாகல் மாவட்டத்தில் 8,403 சிறுவர்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக ஒரு திட்டத்தை உருவாக்குவது தொடர்பாக, சர்வதேச சிறுவர் நிதியத்துடன் விசேட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார பிரதி அமைச்சர் நாமல் சுதர்ஷன தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடல்களைத் தொடர்ந்து, அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக கூட்டு வேலைத்திட்டம் ஒன்று உருவாக்கப்படும் எனவும் அவர் கூறினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.12.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org